**ஏப்ரல் – 08**

# TNPSC துளிகள்

- 2025-26 ஆம் நிதியாண்டின் முதல் காலாண்டில் 20,000 கோடி ரூபாயினைக் கடனாக வாங்க தமிழக அரசு திட்டமிட்டுள்ளது.
- 2024 ஆம் ஆண்டில் ஏற்பட்ட வெள்ளம், திடீர் வெள்ளம், மேக வெடிப்பு, நிலச்சரிவுகள், புயல் ஆகியவற்றால் பாதிக்கப்பட்டப் பீகார், இமாச்சலப் பிரதேசம், தமிழ்நாடு மற்றும் புதுச்சேரிக்கு சுமார் 1,280.35 கோடி ரூபாய் மதிப்பிலான மத்திய அரசின் கூடுதல் நிதி உதவிக்கு மத்திய உள்துறை அமைச்சர் தலைமையிலான ஒரு உயர்மட்டக் குழுவானது (HLC) அங்கீகாரம் அளித்துள்ளது.
- 50 சதவீதத்திற்கும் மேற்பட்ட பட்டியலிடப்பட்ட பழங்குடியினர் மக்கள்தொகை மற்றும் குறைந்தது 20,000 பழங்குடியினர் வசிக்கும் ஒவ்வொரு தொகுதியிலும் ஒரு பள்ளியை நிறுவச் செய்வதை உறுதி செய்யும் வகையில், 440 ஏகலவ்யா மாதிரி குடியிருப்புப் பள்ளிகளை (EMRS) நிறுவும் திட்டங்களை மத்திய அரசு அறிவித்துள்ளது.
- பாரிசு உடன்படிக்கையின் 6.2 என்ற பிரிவின் கீழ் உமிழ்வுக் குறைப்பு மதிப்புகளைப் பகிர்ந்து கொள்வதற்காக இந்தியாவும் ஜப்பானும் கூட்டு மதிப்பு நெறிமுறையை (JCM) இறுதி செய்துள்ளன.
- 2022 ஆம் ஆண்டில் 2.14 டிரில்லியன் டாலராக இருந்த இந்திய ஊடகம் மற்றும் பொழுது போக்கு (M&E) துறையின் மதிப்பானது, 2023 ஆம் ஆண்டில் சுமார் 8.1% அதிகரித்து, 2.32 டிரில்லியனை எட்டியது என்பதோடு மேலும் இது 2026 ஆம் ஆண்டில் 3.08 டிரில்லியன் டாலரை எட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## ஊட்டியின் முதல் பல்நோக்கு மருத்துவக் கல்லூரி




- அரசு மருத்துவக் கல்லூரி என்று அதிகாரப்பூர்வமாக அழைக்கப்படுகின்ற ஊட்டியின் முதல் பல்நோக்கு மருத்துவக் கல்லூரியானது நீலகிரியில் திறக்கப்பட்டுள்ளது.
- இந்த நகரில் அமைக்கப்பட்டுள்ள இந்த 40 ஏக்கர் மருத்துவமனையில் 21 துறைகள் மற்றும் முதல் வகையான நோயாளி நலச் சேவை வசதிகள் இருக்கும்.
- பழங்குடியினச் சமூகங்களுக்காக என மருத்துவக் கல்லூரியில் முதல் முறையாக 50

படுக்கைகள் கொண்ட சிறப்புப் பிரிவு திறக்கப்பட உள்ளது.

❖ சிம்லாவிற்குப் பிறகு மலைப் பகுதியில் திறக்கப்பட்டுள்ள இந்தியாவின் இரண்டாவது மருத்துவப் பிரிவு இதுவாகும்.

## பாம்பன் இரயில் பாலம்




❖ இந்தியப் பிரதமர், நாட்டின் பிரதான நிலப்பகுதியை ராமேஸ்வரத்துடன் இணைக்கும் பாம்பன் இரயில் பாலத்தைத் திறந்து வைத்துள்ளார்.

❖ இந்தப் பாலம் ஆனது நாட்டின் முதல் செங்குத்து தூக்கு இரயில் பாலமாகும்.


❖ இது 2022 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் செயல்பாடுகள் நிறுத்தப்பட்ட நூற்றாண்டு காலப் பழமையான பாம்பன் பாலத்திற்கு மாற்றாக அமைக்கப்பட்டுள்ளது.

❖ பழைய பாம்பன் இரயில் பாலத்தின் கட்டுமானப் பணிகள் 1911 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் தொடங்கி, அந்தப் பாலம் 1914 ஆம் ஆண்டு பிப்ரவரி 24 ஆம் தேதியன்று

திறக்கப் பட்டது.

- இலங்கையில் புகையிலை உற்பத்தியாளர்களால் புகையிலை வர்த்தகத்தை நன்கு ஊக்குவிப்பதற்காக இந்தப் பாலம் உருவாக்கப்பட்டது.

## 50 புதிய வருவாய் குறுவட்டப் பிரிவுகள்





- மக்கள்தொகை அதிகரித்து வரும் சென்னை, செங்கல்பட்டு, திருவள்ளூர், காஞ்சிபுரம் மற்றும் பல மாவட்டங்களில் 50 புதிய வருவாய் குறுவட்டங்களை நிர்வாகிப்பதற்காக கூடுதல் வருவாய் ஆய்வாளர்கள் நியமிக்கப்பட உள்ளனர்.
- இந்த 50 புதிய வருவாய் குறுவட்டங்கள் வருவாய் ஆய்வாளர்கள் தலைமையிலான சில கிராமங்களின் குழுவை உள்ளடக்கியதாகும்.
- சென்னை மாவட்டத்தில் 14, செங்கல்பட்டு மாவட்டத்தில் 4, திருவள்ளூர் மாவட்டத்தில் 2 மற்றும் காஞ்சிபுரம் மாவட்டத்தில் 2 புதிய வருவாய் குறுவட்டங்களும் நிர்ணயிக்கப் படும்.
- மதுரையில் 7 புதிய வருவாய் குறுவட்டங்களும், சேலத்தில் 4 புதிய வருவாய் குறு வட்டங்களும் நிர்ணயிக்கப்படும் என்பதோடு திருநெல்வேலிக்குக் கூடுதலாக 3 புதிய வருவாய் குறுவட்டங்கள் நிர்ணயிக்கப்படும்.
- இதில் தூத்துக்குடி, திருவண்ணாமலை, ஈரோடு, திருப்பத்தூர், திண்டுக்கல், கடலூர், தஞ்சாவூர், திருப்பூர் மற்றும் விழுப்புரம் போன்ற சில நகரங்களுக்கு தலா ஒரு புதிய வருவாய் குறுவட்டங்கள் நிர்ணயிக்கப் படும்.
- செங்கல்பட்டு, திருச்சி மற்றும் மதுரை போன்ற மாவட்டங்களில் 25 புதிய வருவாய் கிராமங்களையும் அரசாங்கம் உருவாக்க உள்ளது.
- தற்போது, இந்த மாநிலத்தின் 38 மாவட்டங்களில் 1,197 புதிய வருவாய் குறுவட்டங்கள் மற்றும் 16,744 கிராமங்கள் உள்ளன.

## விலங்கு வழித் தொற்று நோய்கள் குறித்த ஆய்வு

- இந்திய மருத்துவ ஆராய்ச்சிச் சபையின் (ICMR) தலைமையிலான முதல் வகையான

ஆய்வில் பங்கேற்கும் மூன்று மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்றாகும்.

- சரணாலயங்கள் போன்ற பறவை-மனித தொடர்பு அதிகமாக உள்ள சில சூழல்களில் விலங்கு வழித் தொற்று நோய்களைக் கண்காணிப்பதற்காக வேண்டி கண்காணிப்பு மாதிரியை உருவாக்குவதே இந்த ஆய்வின் நோக்கமாகும்.
- தமிழ்நாட்டில், இந்த ஆய்வானது நாகப்பட்டின மாவட்டத்தில் உள்ள கோடியக்கரை பறவைகள் சரணாலயத்திலும் மற்றும் திருவாரூர் மாவட்டத்தில் வடுவூர் பறவைகள் சரணாலயத்திலும் நடத்தப்பட உள்ளது.





# தேசியச் செய்திகள்

## 18வது மக்களவையின் முதல் நிதிநிலை அறிக்கைக் கூட்டத் தொடர்


- 18வது மக்களவையின் முதல் நிதிநிலை அறிக்கை கூட்டத் தொடரானது, அதிக செயல் பாட்டுத் திறன் கொண்டதாக பதிவாகியுள்ளது.
- இது அதன் கடைசி நாளில் சில இடையூறுகளைக் கண்டதுடன் இரு அவைகளிலும் ஒத்தி வைப்புகள் ஏற்பட்டன.
- மாநிலங்களவையானது, வக்ஃப் மசோதாவை நிறைவேற்ற வேண்டி, 17.02 மணி நேரம் இடைவேளை இல்லாமல் செயலாற்றி முந்தையச் சாதனைகளை முறியடித்துள்ளது.
- குடியரசுத் தலைவரின் உரைக்கு நன்றியுரைப்பு தீர்மானம் ஆனது, மக்களவையில் அதற்கென ஒதுக்கப்பட்ட 12 மணி நேரத்தை விட மிக அதிகமாக 17 மணி நேரம் 23 நிமிடங்கள் வரை விவாதிக்கப்பட்டது.
- மாநிலங்களவையில், இந்த விவாதம் ஆனது 21 மணி நேரம் 46 நிமிடங்கள் வரையில் நடைபெற்றது.
- மத்திய நிதிநிலை அறிக்கையானது, மக்களவையில் 16 மணி நேரம் 13 நிமிடங்களும், மாநிலங்களவையில் 17 மணி நேரம் 56 நிமிடங்களும் விவாதிக்கப்பட்டது.
- பாராளுமன்றத்தின் இரு அவைகளாலும் மொத்தம் 16 மசோதாக்கள் நிறைவேற்றப் பட்டன.
- மக்களவையானது சுமார் 118% செயல்பாட்டுத் திறனையும், மாநிலங்களவை 119% செயல்பாட்டு திறனையும் பதிவு செய்துள்ளது.
- உடுகுறியிட்ட கேள்விகளில் சுமார் 28% கேள்விகளுக்கு மட்டுமே வாய்மொழியாக பதிலளிக்கப் பட்டது.
- 18வது மக்களவையின் முதல் ஆண்டில் பதினொரு மசோதாக்கள் நிறைவேற்றப் பட்டன என்பதோடு இது 1999 ஆம் ஆண்டிலிருந்து நிறைவேற்றப்பட்டதை விட மிகக்

குறைவாகும்.

- மக்களவையானது மூன்று அமைச்சகங்களின் செலவினங்களை மட்டும் விவாதித்தது.




## தங்குமிடம் உரிமை குறித்த உச்ச நீதிமன்றம்




- 2021 ஆம் ஆண்டில் சட்டவிரோதமாக வீடுகள் இடிக்கப்பட்ட ஐந்து பேருக்கு தலா 10 லட்சம் ரூபாய் இழப்பீடு வழங்குமாறு பிரயாக்ராஜ் மேம்பாட்டு ஆணையத்திற்கு உச்ச நீதிமன்றம் (2021 ஆம் ஆண்டு ஜுல்பிகர் ஹைதர் எதிர் உத்தரப் பிரதேச மாநில அரசு என்ற வழக்கில்) உத்தரவிட்டுள்ளது.
- தங்குமிடம் (வீடு) உரிமை என்பது ஓர் அடிப்படை உரிமை என்றும் அரசியலமைப்பின் 21வது பிரிவின் ஒருங்கிணைந்த அங்கம் அது என்றும் உச்ச நீதிமன்றம் கூறியது.

- விதி மீறல்கள் பற்றிய மிகத் தெளிவானக் குறிப்புடன், கட்டாய 15 நாட்கள் முன் அறிவிப்பு மற்றும் குடியிருப்பாளர்கள் வீடுகளின் இடிப்பு உத்தரவுகளை எதிர்த்து வழக்குத் தொடர மிக ஒரு நியாயமான வாய்ப்பினையும் இது மீண்டும் உறுதி செய்து உள்ளது.

## விமானப் பொருள்கள் மசோதா, 2025




- இந்தியாவில் விமான நிறுவனங்கள் விமானங்களைக் குத்தகைக்கு எடுப்பதற்கான அபாயங்கள் மற்றும் செலவுகளைக் குறைக்க உதவும் 2025 ஆம் ஆண்டு விமானம் சார்ந்த ஈடுபாடுகளைப் பாதுகாத்தல் மசோதாவிற்குப் பாராளுமன்றம் அங்கீகாரம் அளித்துள்ளது.
- இந்த மசோதாவானது 2001 ஆம் ஆண்டு கேப் டவுன் உடன்படிக்கையின் கட்டமைப்பை அடிப்படையாகக் கொண்டது.
- இந்த உடன்படிக்கை ஆனது, சர்வதேசக் குத்தகை ஒப்பந்தங்களை எளிமைப் படுத்தச் செய்வதையும் தரப்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டது.
- இந்தியா இந்த உடன்படிக்கையினை 2008 ஆம் ஆண்டில் அதிகராப் பூர்வமாக ஏற்றுக் கொண்டது.

## ZooWIN தளம்


- மத்திய சுகாதாரத் துறையானது, ZooWIN என்ற ஒரு எண்ணிமத் தளத்தினை அறிமுகப் படுத்தி யுள்ளது.
- நாடு முழுவதும் வெறிநாய்க்கடி நோய்ப் பாதிப்பிறகு எதிரானத் தடுப்பூசிகள் (ARV) மற்றும் பாம்புக் கடி விஷத் தடுப்பு மருந்து (ASV) ஆகியவற்றின் நிகழ்நேரக் கிடைக்கும் தன்மையைக் கண்காணித்து மேலாண்மை செய்வதற்காக இது வடிவமைக்கப் பட்டு உள்ளது.
- Co-WIN மற்றும் U-WIN தளங்களைப் போலவே, இந்த ZooWIN தளமானது தரவுகளை நன்கு மையப்படுத்தி சுகாதார சேவை வழங்கும் அமைப்புகள், நகராட்சி அதிகாரிகள் மற்றும் கால்நடை நலச் சேவைகளை வழங்கும் அமைப்புகள் ஆகியவற்றிடையே ஒத்துழைப்பை மேம்படுத்தும்.
- உலகளவில் ஒவ்வோர் ஆண்டும் சுமார் 60,000 உயிரிழப்புகள் பதிவாகியுள்ளதுடன்,

வெறி நாய்க் கடி நோய் காரணமாக உலகளவில் பதிவான உயிரிழப்புகளில் சுமார் 36 சதவீதம் இந்தியாவில் பதிவாகியுள்ளது.

- கூடுதலாக, பாம்புக் கடியின் காரணமாக இந்தியாவில் ஆண்டுதோறும் சுமார் 50,000 உயிரிழப்புகள் பதிவாகின்றன.




## PMJDY கணக்குகள்




- இந்திய அரசு ஆனது, பிரதான் மந்திரி ஜன் தன் யோஜனா (PMJDY) திட்டத்தின் கீழ் 55 கோடிக்கும் மேற்பட்ட ஜன் தன் கணக்குகளை வெற்றிகரமாகத் தொடங்கியுள்ளது,
- 2014 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் PMJDY மூலம் தேசிய நிதி உள்ளடக்கத் திட்டம் (NMFI) தொடங்கப்பட்டது.
- வங்கிச் சேவை இல்லாத அனைத்து வயது வந்தோருக்கும் வங்கிக் கணக்கு அணுகலை வழங்குவதை PMJDY நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ஜன் தன் கணக்கு வைத்திருப்பவர்கள் அரசாங்கத்தின் நேரடிப் பயன் பரிமாற்ற (DBT) அமைப்பு மூலம் நேரடியாக நிதியைப் பெறலாம்.

## ஹன்சா - அடுத்த தலைமுறை நுட்பத்திலான பயிற்சி விமானம்

- வணிக ரீதியான விமானி (வானூர்தி ஓட்டுநர்) உரிமத்திற்காக (CPL), உள்நாட்டிலேயே வடிவமைக்கப்பட்டு உருவாக்கப்பட்ட அறிவியல் மற்றும் தொழில்துறை ஆராய்ச்சி சபையின் HANSA-3 (NG) பயிற்சி விமானத்தின் தொழில்நுட்பப் பரிமாற்றத்தினை (ToT) மத்திய அரசு இறுதி செய்துள்ளது.
- இது அடுத்தத் தலைமுறை நுட்பத்திலான, இரண்டு இருக்கைகள் கொண்ட, வானூர்தி

ஓட்டுநர் பயிற்சிக்காக உருவாக்கப்பட்ட முதல் கட்டப் பயிற்சி விமானமாகும்.

❖ இது பெங்களூருவில் உள்ள CSIR-தேசிய விண்வெளி ஆய்வகங்களால் (NAL) உள்நாட்டில் வடிவமைக்கப்பட்டு உருவாக்கப் பட்டது.




# சர்வதேசச் செய்திகள்

## அமெரிக்காவின் பரஸ்பர சுங்க வரிகள்

| | Country | Tariffs charged on US goods * | US reciprocal tariffs |
|---|---|---|---|
| 1 | Lesotho | 99% | 50% |
| 2 | Saint Pierre and Miquelon | 99% | 50% |
| 3 | Cambodia | 97% | 49% |
| 4 | Laos | 95% | 48% |
| 5 | Madagascar | 93% | 47% |
| 6 | Vietnam | 90% | 46% |
| 7 | Myanmar | 88% | 44% |
| 8 | Sri Lanka | 88% | 44% |
| 9 | Falkland Islands (Islas Malvinas) | 82% | 42% |
| 10 | Syria | 81% | 41% |

❖ அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப், அமெரிக்கா வர்த்தகம் மேற்கொள்ளும் சுமார் அனைத்து நாடுகளையும் குறி வைத்து பல்வேறு பரஸ்பரச் சுங்க வரிகளை அறிவித்து உள்ளார்.

❖ 2023 ஆம் ஆண்டில், அமெரிக்க இறக்குமதிகள் அதன் ஏற்றுமதியை விட 1.1 டிரில்லியன் டாலர் அதிகமாக இருந்தன என்பதோடு அமெரிக்காவைப் போல வேறு எந்த நாட்டிலும் பெரிய அளவிலான வர்த்தகப் பற்றாக்குறை பதிவாகவில்லை.

❖ ஏப்ரல் 02 ஆம் தேதியை "விடுதலை நாள்" என்று டிரம்ப் குறிப்பிட்டு வந்தார்.


❖ சீனப் பொருட்கள் சுமார் 34 சதவீத பரஸ்பர வரியை எதிர்கொள்ள உள்ளன என்பதோடு இது சீனப் பொருட்களின் மீதான ஒட்டு மொத்த வரியை 54 சதவீதமாக உயர்த்துகிறது.

❖ ஏப்ரல் 10 ஆம் தேதி முதல் அமெரிக்காவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் அனைத்து

இறக்குமதிகள் மீதும் சுமார் 34% பரஸ்பர சுங்க வரிகளை விதிக்க உள்ளதாக சீனாவும் அறிவித்துள்ளது.

- 2024 ஆம் ஆண்டில், சீனாவானது அமெரிக்காவின் இரண்டாவது பெரிய வர்த்தகப் பங்காளியாக இருந்தது.
- கம்போடியா மிக அதிக அளவிலான வரிகளால் (49%) பாதிக்கப்பட்டுள்ளது.
- இந்தியா மீது 26% விகித சுங்க வரி விதிக்கப்பட்டுள்ளது.

## பெர்ம் நீர்மூழ்கிக் கப்பல்





- அதிபர் விளாடிமிர் புதின், மீயொலி சிர்கான் எறிகணைகள் பொருத்தப்பட்ட பெர்ம் என்ற அணுசக்தி நீர்மூழ்கிக் கப்பலை தொடங்கி வைத்தார்.
- சிர்கான் ஆனது ஒலியை விட பல மடங்கு வேகத்தில் பயணிக்கும் திறன் கொண்டது.
- சிர்கான் எறிகணைகள் சுமார் 900 கி.மீ. தூரத்தில் உள்ள இலக்குகளைத் தாக்கும் திறன் கொண்டுள்ளன என்பதோடு மேலும் அவற்றைத் தடுத்து எதிர்ப்பதும் கடினமாகும்.
- செவ்மாஷ் என்ற கப்பல் கட்டும் தளத்தால் கட்டப்பட்ட இந்தப் பெர்ம் கப்பலானது, இந்த எறிகணைகளை ஒரு தரநிலையிலான ஆயுதமாகக் கொண்ட அதன் வகுப்பில் முதன்மையானது.

# மாநிலச் செய்திகள்

## மேற்கு வங்காளத்தின் மும்மை நோய் நீக்க முன்னெடுப்பு

- மேற்கு வங்காள மாநிலம் வில்லியம் J. கிளிண்டன் அறக்கட்டளை (WJCF) மற்றும் உலக சுகாதார அமைப்பு ஆகியவற்றுடன் இணைந்து 'மும்முனை நீக்க' முன்னெடுப்பினைத் தொடங்கியுள்ளது.
- இது நாட்டிலேயே இவ்வகையிலான முதல் வகை முன்னெடுப்பு என்று நம்பப்படுகிறது.

- 2026 ஆம் ஆண்டிற்குள் எச்.ஐ.வி, சிபிலிஸ் மற்றும் ஹெபடைடிஸ் B (கல்லீரல் அழற்சி) ஆகிய நோய்கள் தாயிடமிருந்து குழந்தைக்குப் பரவுவதை ஒழிப்பதே இதன் நோக்கம் ஆகும்.
- எச்.ஐ.வி, சிபிலிஸ் மற்றும் ஹெபடைடிஸ் B ஆகிய மூன்று நோய்களும் தொற்றுநோய் ஆகும் என்பதோடு அவற்றின் பரவும் ஒரு முறையானது, பாலியல் மற்றும் செங்குத்து (தாயிடமிருந்து குழந்தைக்கு) பரவுதல் அடிப்படையில் ஒத்திருக்கிறது.




# முக்கிய தினங்கள்

## சமதா திவாஸ் - ஏப்ரல் 05




- சிறந்த தலைவரும் சமூக சீர்திருத்தவாதியுமான ஜக்ஜீவன் இராம் அவர்களின் பிறந்த நாளை நினைவு கூரும் வகையில் இத்தினம் கொண்டாடப்படுகிறது.

- தற்காலிக அரசாங்கத்தின் போது, ஜக்ஜீவன் ராம் அதன் இளம் அமைச்சராகப் பதவி ஏற்றார்.
- சுதந்திரத்திற்குப் பிறகு, நாட்டின் முதல் தொழிலாளர் நலத் துறை அமைச்சராக அவர் நியமிக்கப் பட்டார்.
- 1971 ஆம் ஆண்டு இந்திய-பாகிஸ்தான் போரின் போது அவர் பாதுகாப்பு அமைச்சராக செயலாற்றினார்.
- மொரார்ஜி தேசாய் ஆட்சியின் போது, ஜக்ஜீவன் ராம் துணைப் பிரதமராக நியமிக்கப் பட்டார்.
- 1936 முதல் 1986 ஆம் ஆண்டு வரையிலான 50 ஆண்டுகள் எவ்வித ஒரு இடைவெளியும் இல்லாமல் பாராளுமன்ற உறுப்பினராக இருந்தவர் என்ற உலகச் சாதனையை அவர் கொண்டுள்ளார்.
- இந்தியாவில் மிக நீண்ட காலம் (30 ஆண்டுகள்) அமைச்சரவை அமைச்சராகப் பணி ஆற்றியவரும் இவரே ஆவார்.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★